உ

சிவமயம்.

பொதிகைமாமலை அகத்தியமாமுனிவர்

# திருநெடுந்தாண்டகமாலை.

இஃது

சடாந்த சமரச வேத சுத்த சன்மார்க்கச் சங்[illegible]

தமிழ்ப்புலமைச் செல்வரிலொருவரும்

வடலூர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின்

உடனிருந்து விசுவசித்தவருமாகிய

பண்ணுருட்டி

ஸ்ரீலஸ்ரீ த. க. சுப்பராய செட்டியாரவர்கள்

திருவாய்மலர்ந்தருளியதை

ஷையார் பௌத்திரர் பண்ணுருட்டி

ஸ்ரீமான்

த. க. சு. சொ. ஷண்முகஞ் செட்டியாரவர்களால்


விழுப்புரம்

ஹநுமான் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.


222792


விலை ] 1930. [அணா ஒன்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# முன்னுரை.

வெண்பா.

பண்டைக் குறுமுனியாய்ப் பன்னு மகத்தியன்மேல்
தண்டமிழாற் றாண்டகத்தைச் சாற்றினான்—தொண்டர்புகழ்
பண்ருட்டிச் சுப்பராயப் பாவலனன் னான்பேரன்
சண்முகமச் சிற்பதிப்பித் தான்.

திருமலியும் நடுநாட்டிற் சிறப்புற்றோங்கியதும் அட்டவீரட்டத்துளொன்றுமாகிய, திருவதிகைத் தலத்தையண்மிய பண்ருட்டியில் வைசிய குலத்தோன்றலும் சிவானுபூதிச் செல்வரும் ஸ்ரீமத். வடலூர் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் இராமலிங்க சுவாமிகளின் உடனிருந்த ஆன்ம விசுவாசிகளில் ஒருவரும் தமிழ்ப்புலமை மிகுதியும் பெற்று விளங்கிய ஸ்ரீமத். தி. க. சுப்பராய செட்டியாரவர்கள் கடவுளின் திருவருட் சம்மதத்தின்படி பல நூல்களை எழுதியிருந்தார். அன்னவற்றிற் சில அச்சுவாகனமேற்றப்பட்டன சில அஃதில்லை. ஷை செட்டியாரவர்களின் பாக்களனைத்தும் பக்திச்சுவை ததும்பி, பொருணயம் சொன்னயங்கள் வாய்ந்து, படிக்குமவர் மனங்கனிந்துருகும் தன்மைத்து. ஆகையால் அச்சுவையை நன்கறிந்தவரும், சிவ பூஜாப்பிரியரும் அடியார் பக்தி சிவபக்திகளில் மிக்குனரும், ஜீவகாருண்ய சிந்தையரும் ஷை சுப்பராய செட்டியாரவர்கள் பௌத்திரருமாகிய ஸ்ரீமான். தி. க. சு. சோ. ஷண்முகஞ்செட்டியாரவர்கள் மற்றைய நூல்களையும் பதிப்பிக்க மனமுவந்து முதற்கண் இந்த அகத்தியமாமுனிவர் திருநெடுந்தாண்டகம் என்னும் நூலை அச்சிட்டதற்காக நாம் அவர்பால் மிகுதியும் நன்றிபாராட்டுவதுடன், ஷண்முகஞ்செட்டியாரும் அவர் மாபினர்களும் சால நன்மையுடன் பல்லாண்டு வாழ்க கடவுள் திருவருளை வேண்டுதுஉம்.

*N. B:*—சிதம்பரம் தண்டபாணியனார் திருப்பதிகமும் அச்சிட்டு வெளிவந்துவிட்டது. மிகவும் நமக்கு ஆனந்தமே.

இங்ஙனம்,

பூதூர். வைத்தியநாதையர்,

சென்னை, ஆனந்த விஜய விகடன் ப

உ

சிவமயம்.

ஸ்ரீமத் கணபதி துணை.

# பொதிகைமாமலை அகத்தியமாமுனிவர்

# திரு நெடுந்தாண்டகமாலை

சீர்விளக்குங் கலைகளெலாந் தெளிவாய்ச்சொல்லுஞ்
சித்தர்குல திலகமெனுந் தெய்வக்குன்றை
கார்விளக்குங் கருணையருள் வாரிதன்னை
நமோகுமர சாமிதரும் ஞானவானைப்
பேர்விளக்குஞ் சித்தனைத்துஞ் செய்துளானைப்
பெரியவர்க்கும் பெரியானைப் பிரமன்சேயைத்
தேர்விளக்கு முத்தமிழின் செல்வத்தானைச்
சித்தத்திற் கட்டவல்லார் சித்துளாரே. (1)

தம்பமுதற் பிரமன்வரைப் பொய்தானென்றுந்
சாமிபரம் பொருளான சத்தே யென்றும்
வெம்பிவிழுஞ் சித்தர்மகிழ் வெய்தா ஞான
விஞ்சைதரும் யோகசித்தி கன்மசித்திப்
பம்பியெளி தாகவருங் குருவைப்பேணிற்
பண்ணுமென்று சாதகந்தான் பகர்ந்துளானைக்
கும்பமுனியென்கின்ற கோமான் றன்னைக்
குறுகுமவர் சித்தனைத்துங் குறுகுவாரே. (2)

யோகநிலை முழுதுணர்ந்த சித்தர்க்கெல்லா
மொருகுருவாய் மெய்ஞ்ஞான வுண்மையாகித்
தேகநிலையீதென்று முணர்வீதென்றுஞ்
சித்தனைத்துஞ் சேர்கின்ற விடமீ தென்றும்
போகநிலையற்றவர்கள் புகழீதென்றும்
புண்ணியபா வங்களெலாப் பொருளீதென்றும்
வகநிலையான முருகேசன் சீடன்
என்பெயர்தா னகத்தியனென் றியம்புக் தேவே. (3)

முனிவர்குழாங் கண்பனிக்குங் கனிவுளானை
முருகேச மாமணிக்குஞ் சீடன்றன்னைத்
தனிவிளக்கு நிலையானைப் பிரமனார்குந்
தனியானை யெனைவளர்க்குந் தந்தையானைக்
கனிவுபெறு முளத்திருக்குங் கருணையானைக்
கடலையுளுந் தெல்லையதாய்க் கண்டுளானை
நனிவிளக்குஞ் சித்தானைச் சித்தர்க்கெல்லாம்
நாயகனை நாடுமவர் நலிவில்லாரே. (4)

பலகலைக்கும் பொருளுரைத்துச் சீடர்தம்மைப்
பக்குவத்திற் கொள்வானைப் பகமுன்ளானைச்
சிலகலைக்குந் தன்பெயரிட் டுரைத்துளானைச்
சித்தசிகாமணியான சித்தன்றன்னைத்
தலைமறைக்குந் தன்பேரு மாசான்பேருந்
தரணியினிற் றான்விளங்க வைத்துளானை
மலமறவே பொதிகைமலைவாழுஞ் சித்த
மாமணியை கண்கண்டோர் மருளில்லாரே. (5)

சகத்தியலைவெறுத்து குருசாமியான்றன்
தன்னருளைக் கொள்ளைகொளுந் தகைமையானை
மகத்தான புண்ணியத்தால் கற்பந்தன்னால்
மானதத்தால் யோகத்துப்பாசகத்தால்
அகத்தியனார்மந்திரம் ஓம்-சிம்-வம்- அம்-உம்
மம்-மெனகத்திசவெ னையாவென்றுஞ்
சுகத்தையெமக் கருளென்றுந் தொழுவார்க்கெல்லாஞ்
சுத்தசுகஞானமருள் செய்வான்றானே. (6)

சித்தரெலாங் காண்பதற்கு மந்திரந்தான்
சிவாயநம ஓம் கிலீம் என்றுளானைப்
பத்தரெலாம் வணங்குதற்கு மருள்வைத்தானைப்
பன்னிரண்டு கண்ணுடையான் சீடன்றன்னைத்
சத்தியெலாம் பேர்வழங்கப் பெற்றுளானைச்
சகமார்க்க மெல்லாமுஞ் சார்ந்துளானை
முத்தரெலாந் தொழுகின்ற சித்தன்றன்னை
முறையாக வழிபடுவார் முனிவர்தாமே. (7)

தெளிவுடையாரகத்தியலைச் சேர்ந்துளானைச்
சிவசித்தர் தம்முளத்தின் சிரமுளானைக்
களிவுடையார் மனத்தானைக் கருணையானைக்
கன்மசித்தி யோகசித்திக் கண்டுளானை
யெளிமைதவிர்த்திடப் பொறுத்துமிருந்திலானை
யென்குமரசாமிக்குஞ் சீடன்றன்னைச்
யளிமை குவித்தருள்வானைப் பொதிகையானை
யார்வணங்கப்பெற்றாலுமருள் சேர்வாரே. (8)

சிவசித்த சாதகர்க்குந் தெளிவுளானைச்
சின்மயமாஞ் சித்தினுக்குஞ் சித்துளானைத்
தவசித்த முனிவர்பெறுந் தன்மையானைத்
தழல்காலுந் தம்பிக்கச் செய்துளானைப்
பவசித்த மார்க்கமெலாமருள்வான்றன்னைப்
பங்கயன்றன் சேயைமறை பகர்ந்துளானை
நவசித்தர் தம்முளெழு முனிவரேற்று
நாயகனைக் கண்காண நாடுவேனே. (9)

தம்பிரானேவலெலாங் கொண்டுஞானந்
தழைத்தோங்கிப் பொதிகைமலை சார்ந்துளானை
வெம்பியழு மிவ்வேழைக்கருள்செய் வானை
வில்வனுக்கு மினையானை விருந்துண்டானைச்
செம்மைபெறு சித்தர்மனஞ் சேர்ந்துளானைத்
தேவநர ராக்கதர்மா முனிவரானை
இம்மைமறு மைக்குமரு ளழியாதானை
யென்றும்வளர் மாமணியை யேற்றுவேனே. (10)

வடநாடுந் தாழ்ந்திடவு மணமிடற்கே
வந்தசிவ பெருமான்றன் வாழ்த்துளானைத்
திடமானக்கலியாணக் கோலங்கண்ட
சிவமுருகன்சீடனை மெய்ச் சித்துளானை
யிடமானவம்மைதரும் திருவுளானை
யென்றைக்குமழியானை யிதயத்தானை
மடநாடு மென்போன்றோர் மதியுளானை
வள்ளலெனுங் குறுமுனியை வழுத்துவேனே. (11)

மறைமுனிவோர் வாழ்த்துகின்ற குரவன்றன்னை
மலரவன்றன் மனத்துதித்த வள்ளலானைத்
திறமனைத்துங்கண்டானைச் சுழுமுனைநாட்டத்
திருந்தானைத் துறந்தவர்க்குந் தோன்றாதானை
யறமனைத்துந் தருவானை யயன்றன் வாழ்வை
யகத்தியனைச் சகத்தியலி னருளுளானைத்
துறையனைத்துங் காட்டுமொரு சித்துளானைச்
சுஞ்ஞானப்பொருளானைத் தொழுவேனானே. (12)

புரந்தரனார் வேள்விதனைப் புரிவித்தானைப்
புலோமசைக்கு மணவாளன் புகுவித்தானைக்
கரந்தனிலே கமண்டலமு மேந்தினானைக்
கடலையங்கை யாசமனீ ராக்கினானை
யிரந்தவர்க்குந் திருவளிக்குஞ் சித்துளானை
யிருடியர்தம் பெருமானை யிகத்துளானை
யுரந்தருமால் மருகனருட் சீடன்றன்னை
யுணர்வாரை யென்னுளத்தி னுணருவேனே. (13)

கற்றார்க்கும் புலமைதரும் கலைவல்லானைக்
கருதுசித்தர் பதினெண்பேர் கடவுளானை
நற்றாய்க்குந் தாதைக்கு முரியான்றன்னை
நாற்பத்தெண் புலவர்புகழ் கீரனார்க்குப்
பெற்றாரு மிலக்கணங்கள் போதித்தானைப்
பேதமிலாக் கண்ணனையுங் குறுகு மென்னக்
குற்றாலந்தனில்சிவ லிங்கமாக்கிக்
கொண்டானைக் கண்டவர்தாள் குறுகுவேனே. (14)

தர்ப்பணவோ மங்கள்வழு வாதனானைச்
சாதகர்க்கும் போதகனாய்ச் சார்ந்துளானை
விர்பனர்க்கும் விற்பனனை விருடிகோனை
வேழமுக னீர்கவிழ்த்த வாகன்றன்னை
சர்ப்ப சர்ப்ப வெனுநகுலன் றன்னைப் பாம்பாய்த்
தான்சபித்துக்கொண் டானைச் சகமுள்ளானைக்
கற்பங்கடோறுமொரு சித்துளானைக்
கருணைவடி வானானைக் கருதுவேனே. (15)

மகந்தனையே புரிகின்ற விருடியற்கு
மார்க்கமெலாந்தந்தானை மகவான்கோனைச்
சகந்தனில்வாழ் பதினெண்பேர் சித்தர்க்கான
சாத்திரங்கள் புகன்றானைச் சத்தானானை
யகந்தையிலாச் சிவாலயற்கு முறையையந்தா
யகத்தியனார் திரட்டென்று மளித்துளானைக்
குகன்றனக்கு மாணாக்க னாகினானைக்
குறுமுனியை நாடுமவர் குலஞ்சேர்வேனே. (16)

நான்மறைகள் புகல்விக்கும் ஞானத்தானை
நளினமலர் வாழ்கின்ற பிரமன்சேயை
வான்முறைகள் வழுவாமல் வைத்துளானை
மாதவர்க்கும் மாதவனை மலையுள்ளானை
ஆன்மறைக்கு மரணபய மொன்றிலானை
வுண்மைக்கு வுண்மையனை யும்பர்வானைத்
தேன்மறைக்கு மலர்போன்ற கருணையானைத்
தாருகனைச் செற்றானைச் சிந்திப்பேனே. (17)

விந்தைமலை யிகலடக்கும் விறலான்றன்னை
விளம்பாத நிலையனைத்து மிருடிகட்குஞ்
சந்ததமும் பொதிகையினிற் புகன்றுளானைச்
சதகோடி முனிவர்புடை சூழலானைக்
கந்தபுரிவாழ்கின்ற முதல்வன்றன்னைக்
கலைஞானந் தந்தளிக்கக் கருதினானைச்
சிந்தையினிற் சிவயோக நினைவுளானைச்
சித்தர்கட்குஞ் சித்தனையான் சிந்திப்பேனே. (18)

மாதவங்கள் பலபுரியு முனிவர்க்கெல்லா
மறைஞான நிலையனைத்தும் வழுத்தினானைப்
பாதகரா மாத்தவில்வ னாகியர்க்கும்
பகையானை மகவானைப் பணிகொண்டானைப்
போதகனுஞ் சூதமுனி நெறியெல்லாமும்
புந்திவழிச் சேராதப் போதத்தானை
யாதவனைக் கொண்டானை யகத்தியானை
யறுமுகனுக் கன்பானை யருச்சிப்பேனே (19)

சொல்லாத நிலையனைத்துஞ் சீடற்கே தான்
சொன்னானைச் சுருதிதமிழாக்கினானைப்
பொல்லாத ஜாலங்களெண்ணெண் சித்திப்
புரிகின்ற பெரியானைப் புலமையானைப்
பல்லோருங்காணாத மந்திரத்தைப்
பகர்ந்தானைப் பொதிகைமலைப் பிரமன்றன்னைக்
கொல்லாதசித்தர் குலக்கொழுந்தை ஞானக்
குறுமுனியை நாடுமவர் குமரனானே. (20)

பிரமனுக்கும் பலிபீடமாக்கினானைப்
பேசாதமௌனங்கள் பெற்றுளானை
வரமனைத்துங் கொண்டானைப் பொதிகைதன்னின்
மணிமந்திர மவுடதமும் வைத்துளானை
வுரமனைத்துந்தந்த சித்தர் தானத்தானை
யோங்கார வெளியதனிலுண்மையானைப்
பரமனைத்துந் தானான விசாகன்றன்னை
பக்குவத்திற் கொண்டவனைப் பணிந்துளேனே. (21)

மந்திரமேபீடமதாய் வைத்துளானை
மலரவர்க்குமெட்டாத மறைசொன்னானைத்
தந்திரமுமாகமுஞ் சாற்றினானைச்
சண்முகனார் தந்தகலைப் பெற்றுளானைப்
புந்தியொரு வழியாக்குஞ் சித்தர்தம்மை
புரந்தானை யறந்தழைக்கும் புலவன்சேயை
யெந்தைகுறு முனியரசைக் கண்டுளோரை
யேற்றி வழிபடுமவர்தா ளேற்றினேனே. (22)

அறுமுனிவர் பெறுகின்ற வருளினானை
யறுமூன்று வரைகளுக்கு மப்பாலானைப்
பெறுமுனிவர் கேட்கின்றநூல் சொன்னானைப்
பிரமனுக்குங் கோயிலதாம் பொதிகையானைச்
சிறுமுனிவர்க் கொருதீக்கை விதிசொன்னானைச்
சித்தனைத்துஞ் செய்தானைச் சிவமானானைக்
குறுமுனியைப் பரகுமரவேள்ளைக் கொண்ட
குணவானை நாடுகின்றேன் குணம்பொல்லேனே. (23)

மறைமுனிவர் கேட்டொழுகும் விதியினானை
மதயானைக் கிளையானை மருவினானை
குறைமுடிக்கு மென்பாலுங் குறுகுவானைக்
குறுமுனியாம் பெயரானைக் குன்றினானைத்
துறைமுடிக்கு நூல்களெலாஞ் சொல்லினானைச்
சுகஞான வெளியிலென்று முலவினானை
யிறைமுனிவர் கேட்டவர மீய்ந்துளானை
யெம்மிறையை யேற்றமவ ரெம்மனோரே. (24)

இலக்கியஞ்சே ரிலக்கணங்கள் புகன்றுளானை
யேதமிலா வைத்தியநூ லியம்பினானைக்
குலக்கொடிபோற் புண்ணியநூல் குறுகினானைக்
குலவுகின்ற மந்திரநூற் கோத்திட்டானைத்
துலக்கமுறும் யோகத்தில் வாதந்தன்னைச்
சொன்னானை சித்தனைத்துந் தோய்ந்துளானைக்
கலக்கமிலாப் பொதிகைமலை வாழுங்கோனைக்
கண்டவரைத் தெண்டனிட்டுக் கருதுவேனே. (25)

குலவுகின்ற சித்தர்களோர் பாலுள்ளானைக்
கூபமதிற் றைலங்கள் கொண்டுளானைப்
பலகலைகடான்புகலுந் தெளிவினானைப்
பதுமனையும் பக்கலிலே வைத்துளானை
மலமறவே புகல்கின்ற ஞானத்தானை
மறைநான்குந் தருவானை மௌனியானைத்
தலமாகப் பொதிகைமலைச் சார்ந்துளானைச்
சஞ்சீவியுடையானைத் தழுவினேனே. (26)

கருமந்தன் றொல்வினைக்குங் கருணையானைக்
கடைமுடிவி லழியாத சித்தியானைத்
தருமங்கள் பலபுகல்சாத் திரத்தினானைத்
தைலங்கண் மூலிகைமாத் திரையினானை
பெருமந்த சித்தர்பெறுங் கற்பத்தானைப்
பெரும்பற்பங் கொண்டானைப் பிரமனார்க்கும்
அருமந்தப் பிள்ளையி னையகத்தியானை
யனுதினமுந் துதிசெய்ய வருளில்லேனே. (27)

கருங்கடலைக் கமண்டலத்திற் பெய்துளானைக்
கற்பங்கள் பலகோடி கடந்துளானைத்
தருங்கமன குளிகை மாத் திரையினானைச்
சதகோடி முனிவர்புடை சூழ்ந்துளானைப்
பெருங்கனக மாக்குவிக்குந் தைலத்தானைப்
பிறப்பிறப்பைத் தவிர்க்கின்ற பற்பத்தானைச்
சுருங்கு மூலத்திருந்தானைப் பொதிகையானைத்
தொழுமவர்க்கே சித்தியெலாந் தோன்றுந்தானே. (28)

தான்புகலுங் கற்பநூல் சித்தியானைத்
தந்திரமந்திர நூலுந் தழுவினானைக்
கோன்புகலு நூலனைத்துங் கொண்டுளானைக்
குமரனருட் பேர்கொடுக்க வாங்கினானை
வான்புகலுஞ் சித்தானை வைத்தியோனை
மந்திரவாதங்களெலா மருவினானை
நான்புகலும் பாட்டினுக்கு மருள்வான்றன்னை
நன்னெஞ்சத்துள்ளானை நாடிற்பேறே. (29)

சடைமுடியுங் கண்டிகையு நுதலும்போற்றித்
தயவுடைய மதிமுகத்தினையும் போற்றிக்
கடைவிழியிலெழும் பிரமவொளியும் போற்றிக்
கருணையுளவுபசாந்த மொழியும்போற்றி
மடைமையிற் சித்தர்க்கருளும் யோகபட்ட
மாத்திரைக்கோல் முத்திரைமாலிகையும் போற்றி
யிடையிலணித்தோல்போற்றி சித்தும்போற்றி
யான்வணங்குந் திருத்தாள்கள் போற்றி போற்றி. (30)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலன் திருவடிகளே சரணம்.

திரு.

## இந்நூலாசிரியரால் இயற்[illegible]

---

குமாரானந்த மடாலைய விருத்த.

*மயிலாப்பூர்—ஞானியார் சுவாமிகளின் தத்துவ தபிமானி யென்ற வியோம பத்திரிகை.*

வேழபுரிமங்கல வமுத விநாயகர் திருப்பதிகம்.

*யாழ்பாணம்—கதிர்வேல் சுவாமிகளென்னுஞ் சமையாதீதா* சுரங்கத் திருப்பணி விருத்தப்பாமாலை.

*குறிஞ்சிப்பாடி—இரத்தினவேல் செட்டியாரகத்துக் கருணை* கொண்ட செல்ல விநாயகர் திருப்பதிகம். ஞான வெள்ளிவேல் பதிகம்.

*திருவுத்தரஞான சிதம்பரமென்னுஞ் சித்திபுரம்—அருட பிரகாச வள்ளலாராகிய* இராமலிங்கசுவாமிகளினருள் மணிமாலை.

*திருநீற்றுத்தொழும் பினராகிய கதிர்வேல் சுவாமிகளென் னுஞ் சமையாதீதர்* யோகமணி விரட்டைப் பதிகம்.

*திருநள்ளாற்றுக்கடுத்த செல்லிமா காளியம்மன்* தசபஞ்சக விட்ரடையாசிரியப்பா.

திருவதிகைப் பெரியநாயகியம்மையார் திருப்பதிகம்.

திருவதிகைப் பெரியநாயகியம்மையார் பிள்ளைத் தமிழ்.

### இனி யச்சிடவேண்டிய புத்தகங்களாவன:—

ஞான பஞ்சகலியாகரணம்.
பஞ்ச நவவியாகரணம்.
கௌமார திருவருட்பா.
திருவதிகை யமகஞானவந்தாதி.
சைவநான் மணிமாலை.
தெய்வ மும்மணிக்கோவை.

சவனிப்பு:—*இந்நூலாசிரியர் இயற்றிய "திருவதிகை வீரட் டாணம் ஸ்ரீ பெரியநாயகியம்மையார் தோத்திரப்பதிக"த்தை பல பக்தர்களின் வேண்டுகோட்படி பண்ணுருட்டி, ஜீவகாருண்ய நிலையம் M. சுந்தரவரதா செட்டியார் அவர்களால் இரண்டாம் [illegible]ப்பு அச்சிடப்படும்.*

ளுக்கோர் நல்ல விருந்து!!

...ற்ற புதிய துப்பறியும் நவீனம்!!!

வெளி வந்துவிட்டது!!

...ர் கதாநாயகமாகப் பிரகாசித்து நவரஸ
அலங்கிர்தமாயமைந்த புதிய நாவல்!

# ருக்மிணீகாந்தன்

அல்லது

## ஆபத்தில் காக்கும் அன்பர்கள்.

அழகிய நான்கு ஆப்டோன் படங்களுடன் கூடியது

இது அதி அனுபவமான ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் தமது கற்பனா சக்தியால், புதிய நடையில் அதி அலங்கார மொழிகளால் எழுதப்பட்டுள்ளது.

படிப்பவர் மனதைப் பிரமிக்கும்படி பரவசப்படுத்தும் தன்மையில் காதற்சொற்பொழிவுடன் அமைந்த ஓர் அதி உன்னத துப்பறியும் நவீனம்.

இதுவரையில் நீங்கள் மனதிலும் நினையாத நவரஸங்களும் (சிருங்காரம், ஆச்சரியம், வீரம், ஹாஸ்யம், காதல், ரௌத்திரம், சோகம், சமத்காரம் முதலியது) இந்நாவலில் நடனம் புரிவதை இதை வாசிக்கும் நண்பர்களே அறியலாம்.

இந்நாவலை படிக்க ஆரம்பித்தவுடன் மந்திரத்தால் கட்டுண்டவர்போல மயங்கி படித்து முடியுமட்டும் ஊணுறக்கமின்றி, ஆனந்த சாகரத்தில் மூழ்கி மெய்மறந்திருப்பீர்கள் என்பது முக்காலும் திண்ணம்.

தாங்கள் உடனே எமது ஒப்பில்லாத நாவலாகிய "ருக்மிணீ காந்தன்" ஐ வாங்கி வாசித்து அதனுள்ள இன்பத்தை பருகுங்கள் (பதினைந்து அழகிய அத்தியாயங்கள் கொண்டது)

இந்நாவலுக்கு ஏற்பட்ட விலை ரூ. 2—0—0.